www.tamilarangam.net

● அகதிகளை வெளியேற்றாதே!

● போராளிகளை இழிவுபடுத்தாதே!

இலங்கைத் தமிழ் மக்கள்
மற்றும் போராளிகள் மீதான
ஒடுக்குமுறையை உடனே நிறுத்து!

இந்தியப் பொதுவுடமைக் கட்சி
(மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)
தமிழ்நாடு அமைப்புக் கமிட்டி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை இனவெறி பாசிச அரசின் கொடூரமான குண்டு வீச்சினால் உற்றார் உறவினரை இழந்து, உடலும் உள்ளமும் ஊனமாக்கப்பட்ட நிலையில் ஆதரவையும் அரவணைப்பையும் தேடி தமிழகத்தில் ஏறக்குறைய 125 ஆயிரம் ஈழத் தமிழர்கள் அகதிகளாய் தஞ்சமடைந்திருக்கிறார்கள். நமது மக்களை நம்பி தஞ்சம் என்று வந்த அவர்களை நாட்டைவிட்டு வெளியேற்றும் முயற்சியில் அவர்கள் மீது இன்று ஆட்சியாளர்கள் கொடூரமான ஒடுக்குமுறையை ஏவிவிட்டிருக்கிறார்கள். கூடவே ஈழப் போராளிகளை இழிவுபடுத்தும் ஈனத்தனமான முயற்சிகளையும் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். மனிதாபிமானமும், ஜனநாயக உணர்வும் கொண்ட அனைவரும் ஆட்சியாளர்களின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிராகக் கிளர்ந் தெழுந்து முறியடிக்க வேண்டியது அவசியமாகும்.

## தமிழகத்தில் தஞ்சம் புகுவது ஈழத்தமிழர்களின் உரிமை

## அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது நமது மக்களின் கடமை!

ஒரு நாட்டில் இனம், மதம் மற்றும் அரசியல் கருத்து வேறுபாடுகள் ஆகியவற்றின் காரணமாக ஒடுக்குமுறைக்கு உள்ளாகி உயிருக்கும், சுதந்திரத்திற்கும் பாதுகாப்பற்ற நிலையில் பிற நாடுகளில் அகதிகளாய்த் தஞ்சம் அடைபவர்களுக்கு முழுப்பாதுகாப்பும் அளிப்பது அந்நாடுகளின் கடமை என அய்க்கிய நாடுகளின் ஜெனிவா மாநாட்டுத் தீர்மானம் ஒன்று கூறுகிறது. அத்தீர்மானத்தில் நமது நாடும் கையெழுத்திட்டுள்ளது.

இன்று இன ஒடுக்குமுறைக்கு எதிரான இலங்கைத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை வேரோடு பிடுங்கி எறிந்துவிடப் போவதாக அறிவித்து இலங்கைத் தமிழ் மக்கள் மீது கோரமான யுத்தம் ஒன்றைத் தொடுத்துள்ளது இலங்கை இனவெறி அரசு. விமானங்கள் மூலம் வீசப்படும் நச்சுக் குண்டுகளால் தமிழ் மக்கள் ஆயிரக் கணக்கில் கொல்லப்படுகிறார்கள். உண்ண உணவின்றி தெருக்களில் பிச்சை எடுத்து உண்ணும் இழிநிலைக்கு ஏராளமானோர் தள்ளப்பட்டுள்ளனர். குழந்தைகள் உட்பட பலர் பட்டினியால் உயிரிழந்து கொண்டிருக்கிறார்கள். அநாதரவாக விடப்பட்டவர்கள் தப்ப வழியின்றி நடுக்கடலிலும், பதுங்கு குழிகளிலும், தெருக்களிலும் பிணமாக மடிந்து கொண்டிருக்கிறார்கள். எஞ்சியவர்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தமிழகத்தில் அகதிகளாய் தஞ்சம் அடைந்திருக்கிறார்கள்.

இங்கு அவர்களுடைய நிலை என்ன? ஈழத் தமிழ் அகதிகள் அனைவரும் தமது பெயர் விபரங்களை உடனடியாக போலீஸ் நிலையங்களில் பதிவு செய்ய வேண்டும் என உத்தரவிட்டுள்ளது ஜெயலலிதா அரசு. இலங்கைத் தமிழ் அகதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள் மட்டும் அல்ல; சிரிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழும் இந்திரா - பண்டார நாயக ஒப்பந்தத்தின் கீழும் இந்தியக் குடியுரிமை பெற்று இந்தியா திரும்பிய மலையக தமிழ் மக்களும் பதிவு செய்யவேண்டும் என உத்தரவிட்டு அவர்களுடைய குடியுரிமையையே கேள்விக்குள்ளாக்கியுள்ளது. பெயர் பதிவு உத்தரவைத் தொடர்ந்து இலங்கைத் தமிழ் மக்கள் மீதான தேடுதல் மிக மூர்க்கத்தனமாக நடைபெறுகிறது. இலங்கைத் தமிழர் வாழும் பகுதிகள் போலீஸ் கும்பலால் தொடர்ந்து முற்றுகை இடப்படுகின்றன. பேருந்து, ரயில் நிலையங்களில் தற்செயலாக நின்று கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்கள் திடீரென போலீசாரால் இழுத்துச் செல்லப்பட்டு விசாரணை என்ற பெயரில் வதைக்கப்படுகின்றனர். பலர் தேசிய பாதுகாப்புச் சட்டம் மற்றும் விசாரணைக் கைதிகள் என்ற பெயரில் சிறையில் தள்ளப்படுகிறார்கள்.

உற்றார் உறவினர்களுடனோ, தனியாகவோ வாடகைக்கு வீடு எடுத்துத் தங்கியிருப்பவர்களின் நிலை இதுவெனில் அகதி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் நிலை இன்னும் மோசமானதாகும். மலக்கிடங்குகளைப் போல காட்சியளிக்கும் சுகாதாரக் கேடான அறைகள், அங்கு அடைக்கப்பட்டுள்ள அகதிகளுக்கு அரை வயிற்றுக்கும், கால் வயிற்றுக்கும் பற்றாத கஞ்சி கிடைப்பதே அரிதென்ற நிலை. தினமும் இருமுறை கையெழுத்திட வேண்டும் எனத் துன்புறுத்தும் அதிகாரிகள். தமிழ் சகோதரிகளின் உடலைக்கூட விலைபேசும் அதிகாரப் பேய்கள், ஆதரவற்றவர்களின் கண்களைக்கூட தோண்டி எடுத்துவிற்று உடல் வளர்க்கும் பிசாசுகள். இன்னும் இவை போன்ற எண்ணற்ற கொடுமைகள். இவை பற்றி எல்லாம் வாய் திறக்க முடியாத அவல நிலை. இப்படி இட்லரின் வதை முகாம்களையும் மிஞ்சும் நிலையிலேயே அகதி முகாம்கள்.

இவை போதாதென்று ஈழத்தமிழ் அகதிகளை இலங்கைக்குத் துரத்துவோம், அந்தமானுக்குக் கடத்துவோம் என்று கொக்கரிக்கிறது ஜெயலலிதா - வாழப்பாடி கும்பல். இவை எல்லாம் ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனிவா தீர்மானத்துக்கு எதிரானவை மட்டுமல்ல, நமது தமிழ் மக்களின் மனிதாபிமான உணர்வையே கேள்விக்குள்ளாக்கும் காட்டுமிராண்டித்தனமாகும். தஞ்சம் என்று வந்த நந்தமிழ் பேசும் சொந்த இனத்திற்கே இங்கு பாதுகாப்பு இல்லை என துரத்தியடிப்பது பச்சை இனத் துரோகமும் ஆகும்.

ஜெயலலிதா - வாழப்பாடி கும்பல் மனிதாபிமான உணர்வுக்கும், இன உணர்வுக்கும் விடுத்துள்ள சவாலை முறியடிக்க நமது தமிழ் மக்கள் உறுதி பூண வேண்டும்.

## போராளிகளை இழிவு படுத்துவதன் நோக்கம் புரட்சிகர ஜனநாயக இயக்கங்களைத் தனிமைப்படுத்துவதே

ஜெயலலிதா - வாழப்பாடி கும்பலும் அவர்களின் ஊதுகுழல்களான முதலாளித்துவ பத்திரிகைகளும் ஈழப் போராளிகளுக்கு எதிராக ஈனத்தனமான பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். அவர்களை கொலைகாரர்களாக, கொள்ளைக்காரர்களாக, சமூக விரோதிகளாக, ஆண் - பெண் பித்தர்களாக தமது கழிசடை மொழி நடையில் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இது ஒன்றும் புதியதல்ல. ஒரு போராட்டத்தை நசுக்கி ஒழிக்கத் தீர்மானித்துவிட்டால் அப்போராட்டத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னோடிகளைப் பற்றி கீழான பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்து விடுவது பிற்போக்கு ஆளும் வர்க்கங்கள் எப்போதும் கடைப்பிடிக்கும் தந்திரமே. இதன் மூலம் போராளிகளை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தி ஒழிப்பது அவர்களுடைய நோக்கம். வெள்ளை ஏகாதிபத்தியம் சுதந்திரப் போராட்ட காலத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு வீரர்களை இப்படித்தான் இழிவுபடுத்தி பிரச்சாரம் செய்தது. கிரிமினல் குற்றவாளிகளாகச் சித்தரித்தது. கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களையும், இன உரிமைப் போராட்ட இயக்கங்களையும் இவ்வாறு தான் இந்திய பிற்போக்கு ஆட்சியாளர்கள் சித்தரித்து வருகிறார்கள். புயலெனக் கிளம்பிய நக்சல்பாரி புரட்சியாளர்களை கொலைகாரர்கள் கொள்ளைக்காரர்கள் என்றே இன்று வரை ஆளும் வர்க்கங்கள் இகழ்ந்து வருகின்றன. இதன் மூலம் இலட்சிய வேட்கை கொண்ட போராளிகளின் அரசியல் கொள்கைகள் நோக்கங்களை மக்களிடமிருந்து மறைத்து விடுவதே ஆளும் கும்பல்களின் நோக்கம். தங்களின் இந்தக் கேடான நோக்கத்திற்காக எத்தகைய கேவலமான பொய், புரட்டுகளையும் அள்ளி வீசுவதற்கு அவர்கள் தயங்குவதில்லை. இப்போது ஈழப்போராளிகள் விசயத்தில் ஆட்சியாளர்கள் மேற்கொண்டிருப்பதும் இதே அணுகுமுறைதான்.

போராளிகள் மீதான இந்த அவதூறுப் பிரச்சாரம் ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பின் தொடங்கியதல்ல. ஈழப்போராட்டம் நமது நாட்டில் மக்கள் மத்தியில் ஒரு எழுச்சியையும் போராட்ட உத்வேகத்தையும் ஏற்படுத்துவதைக் கண்டு அஞ்சிய ஆளும் கும்பல் இந்த எழுச்சியை நசுக்குவதற்காக இங்கு ஆயுதக் கலாச்சாரம் பரவிவிட்டது என்றும், அதற்குக் காரணம் ஈழப்போராளிகளே என்றும் முன்பிருந்தே கொக்கரித்து வந்துள்ளனர். இப்போது ராஜீவ் கொலையை இன்னும் கூடுதலாக தமது நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் ராஜீவ் ஒரு மிகப்பெரிய கொலைகாரன், கொள்ளைக்காரன். தான் முதன் முதலில் பதவியேற்ற போதே டெல்லியில் பல நூறு சீக்கியர்கள் கொல்லப்பட்டதை நியாயப்படுத்திய அரக்கன். போபாலில் பல்லாயிரவர் விசவாயுவால் மடிந்தபோது பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்காதபடி ஏகாதிபத்திய கம்பெனியுடன் சமரசம் செய்து கொண்ட மனிதாபிமானமற்ற கொடியவன். ஈழத்திற்கு இராணுவத்தை அனுப்பி பல நூறு தமிழ் சகோதரர்களை படுகொலை செய்து, ஊனமாக்கி, குடும்பங்களை, சகோதரிகளை சீரழித்தவன். போபர்ஸ் பீரங்கி பேர ஊழலில் பல கோடி ரூபாய் கொள்ளையடித்தவன். மொத்த நாட்டையே பெரும் நெருக்கடிக்கு இட்டுச் சென்றவன். இந்தக் காரணங்களினால் கடந்த தேர்தலில் மக்களால் தூக்கி எறியப்பட்டவன்.

இப்படிப்பட்டவனுக்கு மரண தண்டனை அதிகமானதல்ல. அவன் கொலை செய்யப்படுவது வருந்துவதற்கோ, அனுதாபத்துக்கோ உரியதல்ல. எனினும் அவனுடைய மரணத்திற்குப்பின் ஆளும் கும்பல்கள் ஒட்டுமொத்தமாக அவனை மிகப்பெரிய தலைவன், நேர்மையாளன், மனிதாபிமானி, உலக அமைதி விரும்பியவன், பாரத ரத்தினா என்று பலவாறாக நாள்தோறும் புகழ்ந்து தள்ளுகின்றன. இப்படிப்பட்ட உத்தமனை ஈழப்போராளிகள் கொலை செய்து விட்டார்கள் என பிரச்சாரம் செய்கின்றன.

இதன் மூலம் ஈழப்போராளிகளை தமிழக மக்களின் வெறுப்புக்குள்ளாக்கவும், ஈழப்போராட்டம் தந்த போராட்ட எழுச்சியையும் உத்வேகத்தையும் மக்களிடமிருந்து நசுக்கித் துடைத்தொழிக்கவும், அதன் மூலம் புரட்சிகர ஜனநாயக சக்திகளை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தி நசுக்கவும் ஆட்சியாளர்கள் முயல்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனவே ஈழப்போராளிகள் குறித்த இழிமொழிகள் இந்திய புரட்சிகர, ஜன நாயக இயக்கத்துக்கு எதிரான தாக்குதல் ஆகும். இத்தாக்குதலை அனைத்து புரட்சிகர, ஜனநாயக சக்திகளும் இணைந்து நின்று முறியடிக்க வேண்டும்.

## ஈழப் பிரச்சினையில் இந்திய ஆட்சியாளர்களின் கொள்கை ஆதிக்க விஸ்தரிப்பு வாதமே!

இந்திய ஆட்சியாளர்கள் தொடர்ந்து இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டையும், ஈழத்தமிழர்களின் உரிமையையும் பாதுகாப்பது பற்றி மாறி மாறி பேசி வருகிறார்கள். எனினும் இதில் அவர்களுடைய உண்மையான நோக்கம் இலங்கை நாடு முழுவதன் மீதும் தமது முழுமையான அதிகாரத்தையும், சுரண்டலையும் நிறுவிப் பாதுகாப்பதேயாகும். தெற்காசியப் பிராந்தியம் முழுவதையும் தன் வல்லாண்மையின் கீழ் வைத்துக்கொண்டு இப்பிராந்தியத்தின் பேட்டை ரவுடியாக உலா வரவேண்டும் என்பதுதான் இந்திய ஆட்சியாளர்களின் கனவு. இந்தக் கனவின் ஒரு பகுதியாகவே இலங்கை - ஈழப் பிரச்சினையிலும் தமது அணுகுமுறையை வகுத்து செயல்படுத்தி வருகிறார்கள்.

அண்டை நாடுகளின் பிரதேச ஒருமைப்பாட்டை மதிப்பவர்களாகக் கூறிக் கொள்ளும் இந்திய ஆட்சியாளர்கள் தான் பாகிஸ்தானை உடைத்து பங்களாதேஷ் என்ற தனி நாட்டை உருவாக்க காரணமாயிருந்தார்கள். அண்டை நாடுகளின் சுதந்திரத்தையும், ஆட்சியுரிமையையும் மதிப்பதாகக் கூறிக் கொண்டே தான் காஷ்மீர், சிக்கிம் தேசங்களை இந்தியாவுடன் இணைத்துக் கொண்டார்கள். பூடான் நேபாளத்தில் தொடர்ந்து தலையிட்டு அச்சுறுத்தி வருகிறார்கள். பாகிஸ்தானுடன் அடிக்கடி வலுச்சண்டைகளில் ஈடுபட்டு அதனுடன் ஒரு போர் மறுப்பு ஒப்பந்தம் செய்யக்கூட மறுத்து வருகிறார்கள். எனவே இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டுக்கு இந்தியா தரும் உறுதிமொழிகள் அனைத்தும் ஆடுகளின் பாதுகாப்புக்கு ஓநாய் தரும் உறுதிமொழிகளேயாகும்.

ஈழத்தமிழர்களின் உரிமைக்கு இந்திய அரசு தரும் உறுதிமொழிகூட இப்படிப் பட்டதுதான். அண்டை நாடுகளின் ஆட்சியுரிமையை மதிக்காமல் அதில் தலையிட்டு இணைத்துவரும் இந்தியா தன் நாட்டில் உள்ள தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்து தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டிக் காத்துவரும் இந்தியா, அண்டை நாட்டில் உள்ள ஒரு தேசிய இனத்தின் உரிமைக்கு பாதுகாப்பளிக்கும் எனக்கூறுவது எச்சில் வடியும் நாவுடன் ஓநாய் ஒன்று ஆடுகளுக்குப் பாதுகாப்பளிப்பதாகக் கூறுவது போன்றதுதான்.

தெற்காசியாவில் இந்தியாவின் மேலாதிக்கத்தை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளும்படி நிர்பந்திக்க வேண்டும் என்பதற்காகவே ஈழப்போராளி குழுக்களை ஊட்டி வளர்த்துவிட்டது இந்தியா. அவர்களுக்கு இந்தியாவில் பயிற்சி முகாம் அமைத்து ஆயுதப்பயிற்சி அளித்தது. ஆயுதங்களை வாரி வழங்கியது. நிதி உதவியளித்தது. சர்வதேசிய ரீதியில் செயல்பட வசதிகள் செய்து கொடுத்தது. இவை எல்லாம் இலங்கையில் ஈழத்தமிழர்களின் இன உரிமையைப் பாதுகாப்பது என்ற பெயரில் செய்யப்பட்ட போதிலும் உண்மை அதுவல்ல. இலங்கை அரசை முற்றாக அடிபணியச் செய்வதற்கான பகடைக் காய்களாக ஈழப்போராளி இயக்கங்களைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பயன்படுத்திக் கொள்வது தான் உண்மையான நோக்கம். இந்தியாவைப் பொறுத்த வரை இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டை பாதுகாப்பதோ, ஈழத்தமிழர்களின் உரிமையைப் பாதுகாப்பதோ நோக்கமல்ல. இலங்கை தீவு முழுவதன் மீதும் தனது மேலாண்மையை நிறுவுவதற்கு அவசியமானால் இலங்கையைப் பிளவுபடுத்துவதற்குக் கூட இந்தியா தயங்காது என்பதை இலங்கை அரசு உணர்ந்தே இருந்தது. எனவே தான் ஜெயவர்த்தனா, ராஜீவுடன் இணைந்து இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இதன் மூலம் தெற்காசியாவில் இந்தியாவின் மேலாண்மையை இலங்கை அரசு பணிவுடன் ஏற்றுக்கொண்டது. ஈழப் புலிகளும், தெற்காசியாவில் இந்தியாவின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தார்கள். எனினும், இலங்கை அரசின் அறிவிப்பிற்குப்பின் புலிகளின் அறிவிப்பு இந்திய அரசிற்கு தேவையற்றதாகிவிட்டது. எனவே ஒப்பந்தப்படி இலங்கை இனவெறி அரசுக்கு அடங்கி இணைந்துபோக மறுத்த புலிகள் இயக்கத்தின் மீது ராணுவத்தை ஏவி தமிழ் மக்கள் மீதே ஒரு யுத்தத்தைத் தொடுத்தது இந்திய அரசு.

விடுதலைப் புலிகள் மற்றும் இந்திய - இலங்கை மக்களின் கடுமையான எதிர்ப்பின் காரணமாக இந்திய ராணுவம் வெற்றி பெறமுடியாமல் திரும்பிய அதே நேரத்தில் ஈழப்போராட்டம் இந்திய மக்களிடையே குறிப்பாக தமிழ்நாட்டு மக்களிடையே ஏற்படுத்தியிருந்த போராட்ட எழுச்சியும் உத்வேகமும், நம்பிக்கையும் இந்திய ஆளும் வர்க்கங்களுக்கு அச்சம் ஊட்டின. எனவே தமிழகத்தில் ஆயுதக் கலாச்சாரம் பரவிவிட்டதாக ஒரு பீதியை கிளப்பிவிட்டு அதன் மூலம் ஈழப்போராளிகளையும், புரட்சிகர, ஜனநாயக இயக்கங்களையும் மக்களிடமிருந்து தனிமைப் படுத்தவும், மக்களிடம் ஈழப்போராட்டம் ஏற்படுத்தியிருக்கும் எழுச்சியை நசுக்கித் துடைத்தொழிக்கவும் முனைந்திருக்கிறார்கள்.

இந்திய அரசுக்கு ஈழ மக்களின் உரிமைப் போராட்டத்திலோ, இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டிலோ அக்கறை எதுவும் இல்லை. இலங்கை மீதான தமது மேலாதிக்க நோக்கங்களுக்காகவே அன்று போராளிகளை ஆதரித்தார்கள்; ஊட்டி வளர்த்தார்கள். இன்று ஒடுக்குகிறார்கள், இழிவு படுத்துகிறார்கள். இவர்களைப் பொருத்தவரை ஈழப்போராளிகள் இந்திய விஸ்தரிப்புவாத நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான பகடைக்காய்கள் மட்டுமே!

## திராவிட மற்றும் திரிபுவாதக் கட்சிகளின் கொள்கையும் இந்திய ஆதிக்க விஸ்தரிப்புவாதத்துக்குத் துணைபோவதே!

இந்திரா காந்தி ஆட்சியில் ஈழப்போராளிகளுக்கு பயிற்சி முகாம்கள் அமைத்துக்கொடுத்து முழு உதவியும் அளித்து வளர்த்துவிட்ட போது எம்.ஜி.ஆரும், கருணாநிதியும் அதற்கு முழு ஆதரவளித்தார்கள். இந்திராவின் ஆதிக்க விஸ்தரிப்புவாத நோக்கங்களை மறைத்து தமிழ் இனத்திற்குச் செய்யும் அப்பழுக்கற்ற உதவி என சித்தரித்தார்கள். தமது பங்கிற்கு இவர்களும் உதவினார்கள். அதன் மூலம் உலகத் தமிழினத்தின் தலைவர்கள் எனக் காட்டிக்கொள்ள முயன்றார்கள். அதன் பின் இந்திய அரசு இலங்கையுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி அங்கு தமிழர்கள் மீது யுத்தம் ஒன்றைத் தொடுத்தபோது அதை இவர்கள் முழு மூச்சுடன் எதிர்க்கவில்லை. இன்று ஈழ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அகதிகளைத் துன்புறுத்தி வெளியேற்ற வேண்டும் என்பதில் ஜெயலலிதா - வாழப்பாடி கும்பல் வரிந்து கட்டிக்கொண்டு நிற்கும் போது கருணாநிதி அதைக் கண்டுகொள்ளவே இல்லை. கருணாநிதியே அவருடைய பதவிக்காலத்தில் இலங்கைத் தமிழர்கள் காவல் நிலையங்களில் பெயர் பதிவு செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டவர்தான். ஈழப்போராளிகளை இழிவுபடுத்துவதிலும், ஒடுக்கு வதிலும் இன்று ஜெயலலிதா காட்டும் உறுதி தன்னுடையதை விட கூடுதலான தல்ல என்று தினமும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக் கொண்டிருப்பவர்தான் கருணாநிதி.

உண்மையில் இக்கட்சிகள் தமிழ் மக்கள் பாதுகாப்பு பற்றியும், இனவுணர்வு பற்றியும் பேசி வந்ததும், ஈழப் போராளிகளுக்கு ஆதரவளிப்பதாகக் கூறிவந்ததும் இந்திய ஆதிக்க விஸ்தரிப்புவாத நடவடிக்கைகளுக்குத் துணையாக தமிழக மக் களை தயார்ப்படுத்தும் நோக்கத்திற்காக மட்டுமேயாகும். நமது நாட்டின் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கு குரல் கொடுக்காத இக்கட்சிகள், சுய நிர்ணய உரிமை இல்லா தேசிய ஒருமைப்பாட்டை மதிப்பதாக மீண்டும் மீண்டும் உறுதிய ளித்துவரும் இக்கட்சிகள் அண்டை நாடு ஒன்றின் தேசிய இன விடுதலைக்கு ஆதரவளிப்பதாகக் கூறுவது முற்றிலும் ஏமாற்றேயாகும்.

திராவிட அரசியல் கட்சிகள் மட்டுமல்ல; வலது, இடது போலி கம்யூனிஸ்டு கட்சிகளும் இதிலிருந்து வேறுபட்டவையல்ல. இனத்தலைவர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்வதில்லை என்பதைத் தவிர இந்திய ஆதிக்க விஸ்தரிப்புவாதக் கொள்கைகளுக்கு விசுவாசமானவர்களாக நடந்து கொள்வதில் திராவிடக் கட்சி களைவிட விஞ்சியவர்களே இவர்கள்.

தொடக்கம் முதலே இந்திய ஆதிக்க விஸ்தரிப்புவாதக் கொள்கைகளை உறு தியுடன் அம்பலப்படுத்தி எதிர்த்து வருவது மார்க்சிய - லெனினிய புரட்சிகர அமைப்புகள் மட்டுமே. அவர்கள் ஈழ மக்களின் இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை உறுதியாக எப்போதும் ஆதரித்து வந்திருக்கிறார்கள். அதே நேரத் தில் அவர்களுடைய ஜனநாயக விரோத போக்குகளையும், தவறான அரசியல் பாதைகளையும், போர்த்தந்திரங்களையும் விமர்சித்தும் வந்திருக்கிறார்கள். இன் றும்கூட அதே விமர்சனங்களுடனேயே ஈழப்போராளிகளை இழிவுபடுத்து வதற்கு எதிராகவும் ஈழ அகதிகளுக்கு ஆதரவாகவும் அவர்கள் உறுதியுடன் குரல் கொடுக்கிறார்கள்.

இந்திய ஆளும் வர்க்கங்களும், முதலாளிய, திரிபுவாத கட்சிகளும் இந்திய ஆதிக்க விஸ்தரிப்பு வாத நோக்கங்களுடன் ஈழப்போராளிகளுக்கு முதலில் நிபந்த னையற்ற ஆதரவையும் உதவியையும் வாரி வழங்கினார்கள். அவர்களைப் பக டைக் காய்களாகப் பயன்படுத்தி இலங்கை அரசை நிர்பந்தித்து ஒரு ஒப்பந்தத்தை செய்து கொண்டார்கள். அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள மறுத்த புலிகளை ஒடுக்க ராணுவத்தை ஏவினார்கள். ராணுவத்தின் தோல்வியையும், ஈழப்போராட் டம் இந்தியாவில் ஏற்படுத்திய எழுச்சியையும் கண்டஞ்சி தற்போது ஈழப்போராளி களை இழிவுபடுத்துகிறார்கள்; ஒடுக்குமுறைகளை ஏவுகிறார்கள். ஈழ அகதிகளை மனிதாபிமானமற்ற முறையில், சர்வதேச விதிகளையும் மீறி இலங்கைக்குத் துரத்தி விட ஒன்றிணைந்து செயல்படுகிறார்கள். இதில் அதிகாரத்தில் இருக்கும் கட்சிகள் தலைமையேற்று செயல்படுகின்றன. எதிர்க்கட்சிகள் அமைதி காத்து ஆதரவளிக்கின்றன.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்திய ஆதிக்க விஸ்தரிப்புவாதத்திற்குத் துணைபோகும் கட்சிகள் வேறு மாதிரியாக நடந்து கொள்ளும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. இந்திய ஆதிக்க விஸ்தரிப்புவாதத்தை எதிர்க்காத கட்சிகள் உலகின் எந்த ஒரு தேசிய இனத்தின் உரிமைக்கும், விடுதலைக்கும் ஆதரவாக குரல் கொடுக்கும் யோக்கியதையையோ, தார்மீக பலத்தையோ பெற்றவையாக இருக்க முடியாது.

மத்திய, மாநில அரசுகளே,

★ ஈழ அகதிகளை வெளியேற்றாதே! போராளிகளை இழிவுபடுத்தாதே!

★ இலங்கைத் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையை உடனே நிறுத்து!

உழைக்கும் மக்களே!

★ இந்திய அரசின் ஆதிக்க விஸ்தரிப்புவாதக் கொள்கைகளை முறியடிப்போம்!

★ தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுவோம்!

இந்தியப் போதுவுடமைக் கட்சி
(மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)
தமிழ்நாடு அமைப்புக் கமிட்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்